# செயற்குழுக் கூட்டம் (17-06-2023)

இன்று நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், பொதுச் செயலாளர் மற்றும் ஐந்து செயற்குழு உறுப்பினர்களும், மூன்று உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு மே மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற ஆண்டு (2022-23) தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த செயற்குழுக் கூட்டத்தில் இந்த வரவு செலவு கணக்கு ஆண்டறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையை இவ்வாண்டு நடக்க இருக்கும் பொதுக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானம் நிறைவேறியது.

3. நமது இயக்க உறுப்பினர் திரு மனுராஜ் மீது சென்ற ஆண்டு நிகழ்வில் நடந்த ஒரு புகாரின் பெயரில் தன்னிலை விளக்கம் கேட்கப்பட்டது. திருமனுராஜ் அவர்கள் பதில் ஏதும் கொடுக்காவிட்டாலும், திருச்சி மாவட்டத் தலைவர் , அவர் மாவட்ட உறுப்பினர்களுடன் சேர்ந்து முடிவெடுத்து பதில் அளித்திருக்கிறார். திரு மனுராஜ் அவர்களின் நீண்ட கால உறுபினர் சேவையையும், பொதுக்குழுவில், அவர் நடக்கக் காரணமாக, அன்று ஏற்பட்ட விரும்பத்தகாத சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு, எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்று பரிந்துரை செய்துள்ளார். எனவே இந்த விஷயத்தில் திரு மனுராஜ் மீது எந்த நடவடிக்கையும் வேண்டாமெனத் தீர்மானம் நிறைவேறியது.

4. நீதிமன்ற வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி ஒரு வடிவு மனுவைத் தயாரிக்க நமது செயலாளர் (சட்டம்) திரு நஃபீஸ் அஹமத் முன்னாளில் விருப்பம் தெரிவித்திருந்தார். அதைக் கூடிய விரைவில் தயாரிக்குமாறு இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

5. இவ்வருடம் நமது இயக்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் திருச்சியில் நடைபெற வேண்டுமென திருச்சி மாவட்டத் தலைவர் விருப்பம் தெரிவித்துள்ளார். இது குறித்து செயற்குழு விவாதித்து , முடிவில் திருச்சியில் நடத்தத் தீர்மானம் நிறைவேறியது. இப்பொதுக்குழு நடத்த திருச்சி மாவட்டத் தலைவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்வார்

6. நமது வலைத்தளத்தில் நமது இயக்க செய்திகளை திரு புகழேந்தி என்பவர் தான் பிரசுரிக்கிறார். அவர் தற்போது ரூபாய் 5000/- கேட்டு வின்னப்பித்துள்ளார். இதைப்பற்றி அடுத்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும்

7. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| ஒப்பம் | ஒப்பம் |
| வெ ஐயப்பன்<br>உப தலைவர் | வே கார்த்திகை ராஜன்<br>பொது செயலாளர் |